## வரைவு நிகழும் காலம்

42. களவு வெளிப்படா முன்னும் பின்னும்
விளையும் நெறித்தென விளம்பினர் வரைவே.

தலைவன் தலைவி திருமண நிகழ்வு களவுக் காலத்தில் உறுதி செய்யப்படும். அது களவு வாழ்க்கையைப் பிறர் அறிவதற்கு முன்னும் ஊரார் அறிந்த பின்னும் என இருநிலையில் அமையும்.

**களவு வெளிப்படா முன்னுற வரைதல்**
**களவு வெளிப்பட்ட பின்னுற வரைதலென்று**
**ஆயிரண் டென்ப வரைத லாறே.** **(இறை.கள.24)**

என இறையனார் களவியலும் இந்நூலுக்கு முன்பே வரைதலை வரையறை செய்துள்ளது.

(42)

## களவு வெளிப்படா முன் வரைவு

43. **நான்குவகைப் புணர்வினும் தான்தெருண்டு வரைதலும்**
**பாங்கனின் பாங்கியின் தெருளுற்று வரைதலும்**
**களவுவெளிப் படாமுன் வரைத லாகும்.**

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் என்னும் நான்குவகைச் சூழலால் தலைவியோடு கூடும் தலைவன், தானே தெளிவடைந்து தலைவியை மணத்தலும் பாங்கன், பாங்கியின் அறிவுரைப்படி மணந்து கொள்ளுதலும் எனக் களவு வெளிப்படுவதற்கு முன்னர் வரைவு நிகழும்.

(43)

## களவு வெளிப்பட்ட பின் வரைவு

44. **உடன்போய் வரைதலும் மீண்டு வரைதலும்**
**உடன்போக்கு இடையீடு உற்று வரைதலும்**
**களவுவெளிப் பட்டபின் வரைத லாகும்.**

*1. களவு வாழ்க்கை மற்றவர்களுக்குத் தெரியத் தொடங்கியபிறகு தலைவன் தலைவியைத் தன்னூருக்கு அழைத்துச் சென்று வரைதல்,*

*2. தலைவியைத் தன்னுடன் உடன்போக்காக அழைத்துச் சென்று மீண்டும் ஊருக்கு வந்து வரைதல்,*

*3. உடன்போக்கைத் தவிர்த்து உறவினர்களை அணுகி வரைதல் என மூவகையில் அமையும்.*

(44)

## உடன்போய் வரைதல்

45. **அவற்றுள்,**
**உடன்போய் வரைதல் ஒருவகைத் தாகும்.**

மேற்குறிக்கப்பட்ட மூன்று வகை வரைதலில் தலைவியுடன் உடன்போக்குச்சென்று தன்னூரில் வரைந்து கொள்ளுதல் ஒரு வகையான மணமுடித்தல் ஆகும்.

(45)

**மீண்டு வரைதலின் வகை**

46. அவள்மனை வரைதலும் தன்மனை வரைதலும்
எனமீண்டு வரைதல் இருவகைத் தாகும்.

*1. தலைவியுடன் உடன்போக்குச் சென்ற தலைவன் திரும்பி வந்து தலைவியின் இல்லத்தில் வரைதல்,*

*2.தலைவன் தன் இல்லத்தில் வரைதல்.*

என இருவகைப்படும்.

(46)

**அறத்தொடுநிலை நிகழும் இடம்**

தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கையை மேற்கொண்டிருக்கும்போது நிலமையை எடுத்துக் கூறுதல் அறத்தொடு நிலை எனப்படும்.

47. ஆற்று ஊறஞ்சினும் அவன்வரைவு மறுப்பினும்
வேற்றுவரைவு நேரினும் காப்புக்கை மிகினும்
ஆற்றுறத் தோன்றும் அறத்தொடு நிலையே.

களவொழுக்கத்தின் பொருட்டுப் பகற் குறியிலும் இரவுக் குறியிலும் தலைவன் வரும் வழியில் அடையும் இடையூறுகளை நினைந்தும் தலைவனுக்குத் தலைவியைக் கொடுக்க இல்லத்தவர் மறுக்கும் நிலையிலும் பிறர், தலைவியைப் பெண்கேட்க வரும் நிலையிலும் தலைவியின் களவொழுக்கத்தைத் தடுக்கக் காவல் மிகும் போதும் தலைவி தன்னுடைய நிலையைக் கூறி அறத்தொடு நிற்பாள்.

**அறம் என்பது தக்கது; தக்கதனைச் சொல்லி நிற்றல்.... என்றவாறு; அல்லதூஉம் பெண்டிர்க்கு அறம் என்பது கற்பு, கற்பின் தலைநிற்றல் என்பதூஉமாம்.**

**(இறை.கள.29.உரை)**

களவொழுக்கத்திலேயே காலத்தை நீட்டிக்க முடியாத சூழல் வரும்போது தலைவியுடனான தன் உறவைக் கூறி அடுத்துக் கற்பு வாழ்க்கைக்குத் தலைவி வழிவகை செய்து கொள்வதே அறத்தொடு நிற்றலாகும். இறையனார் களவியல்,

**காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்**
**நொதுமலர் வரையும் பருவம் ஆயினும்**
**வரைவெதிர் கொள்ளாது தமர்அவண் மறுப்பினும்**
**அவன்ஊறு அஞ்சுங் காலம் ஆயினும்**
**அந்நால் இடத்தும் மெய்ந்நாண் ஒரீஇ**
**அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே**

**(இறை. கள.29)**

எனத் தோழி அறத்தொடு நிற்றலுக்கான காரணங்களைக் குறிப்பிடுகின்றது.

(47)

அறத்தொடு நிற்பாரும் நெறியும்

48. தலைவி பாங்கிக்கு அறத்தொடு நிற்கும்
பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்கும்
செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும்
நற்றாய் தந்தை தன்னையர்க்கு அறத்தொடு
நிற்கும் என்ப நெறிஉணர்ந் தோரே.

*1. தலைவி தன்னுடைய நிலைமையைத் தோழியாகிய பாங்கியிடம் கூறி அறத்தொடு நிற்பது.*

*2. பாங்கி தலைவியின் நிலையைச் செவிலியிடம் கூறி அறத்தோடு நிற்பது.*

*3. செவிலி நற்றாயிடம் கூறியும் நற்றாய் தலைவியின் தந்தை உடன்பிறந்தோர்க்குக் கூறியும் அறத்தொடு நிற்பது.*

அனைவரின் அறத்தொடு நிற்றலும் தலைவியின் அடுத்த கட்டக் கற்பு வாழ்க்கையை நோக்கியதாகவே அமையும். (48)

தலைமகள் அறத்தொடு நிற்றல்

49. ஒருபுணர்வு ஒழிந்தவற்று ஒருவழித் தணப்பவும்
வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரியவும்
இறைவனைச் செவிலி குறிவயின் காணவும்
மனைவயின் செறிப்பவும் வருத்தம் கூறின்
வினவியக் கண்ணும் வினவாக் கண்ணும்
அனநடைக் கிழத்தி அறத்தொடு நிற்கும்.

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப் பாடு, பாங்கற் கூட்டம் என்னும் நிலையில் ஏற்பட்ட நிகழ்வுகள் பாங்கியாகிய தோழிக்குத் தெரியாதாகையால் தலைவி தோழியிடம் நிலமையைக் கூறி அறத்தொடு நிற்கிறாள்.

*1. ஒருவழித் தணத்தல் என்னும் சில நாட்கள் தலைவனைப் பிரிந்த போது அறத்தொடு நிற்பது.*

*2. பொருள் தேடத் தலைவன் பிரிந்து சென்றபோதும் அறத்தொடு நிற்பது.*

*3. தலைவனும் தலைவியும் பகற்குறி அல்லது இரவுக் குறியில் சந்தித்ததைச் செவிலி கண்டபோது அறத்தொடு நிற்பது.*

*4. இல்லத்தில் தலைவி வெளியே செல்ல முடியாத அளவுக்குக் காவல் மிகுந்த போதும் தலைவி அறத்தொடு நிற்பது.*

இப்படிக் களவொழுக்கத்தின்போது பல்வேறு வகையான இக்கட்டான சூழல்கள் வரும்போது அன்ன நடைத் தலைவி, தோழி

வினவியபோதும் வினவாதபோதும் அவளிடம் தலைவனுடைய உறவைக் கூறி அறத்தோடு நிற்பாள்.

பாங்கியிற் கூட்டம் ஒழித்து மற்ற மூன்று கூட்டம் எனக் கூறியதற்குக் காரணம் பாங்கியிற் கூட்டத்தின் நிகழ்வுகள் பாங்கிக்குத் தெரியும் என்பதாலாகும்.

**வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்**
**வரையா நாளிடை வந்தோன் முட்டினும்**
**உரையெனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும்**
**தானே கூறும் காலமும் உளவே**

**(தொல்.பொருள்.112)**

எனத் தொல்காப்பியர், தலைவி அறத்தொடு நிற்றலைக் கூறுவதும் இவண் நினைவு கூரத் தக்கது.

**பாங்கி அறத்தொடு நிற்றல்** (49)

50. **முன்னிலைப் புறமொழி முன்னிலை மொழிகளில்**
**சின்மொழிப் பாங்கி செவிலிக்கு உணர்த்தும்.**

**1. பிறர் தலைவியின் களவொழுக்கத்தை நேரடியாகச் சொல்லாமல் புறங்கூறும் காலத்து அறத்தொடு நிற்பது.**

**2. நேரடியாகத் தலைவியின் களவொழுக்கத்தைக் கூறும் காலத்து அறத்தொடு நிற்பது.**

என வேறு வழியின்றி நிலமையைக் கூறிப் பாங்கியாகிய தோழி செவிலிக்குத் தலைவி, தலைவன் தொடர்பைக் கூறி அறத்தொடு நிற்பாள்.

பாங்கியின் வேறு பெயர்களாகச் சேடி, இணங்கி, துணைவி, இருளை, சகி, சிலதி என்பவையும் காணப்படுகின்றன.

**செவிலி அறத்தொடு நிற்றல்** (50)

51. **செவிலிநற் றாய்க்குக் கவலையின்று உணர்த்தும்.**

தோழிவழி அறிந்த தலைவி பற்றிய களவொழுக்கச் செய்திகளைச் செவிலி நற்றாய்க்குக் கூறி அறத்தொடு நிற்பாள்.

**நற்றாய் அறத்தொடு நிற்றல்** (51)

52. **நற்றாய் அறத்தொடு நிற்குங் காலைக்**
**குரவனும் தன்னையும் குறிப்பின் உணர்ப.**

செவிலி கூற்றின்வழித் தலைவியின் களவொழுக்கத்தை அறிந்த நற்றாய் இல்லத்தலைவனுக்கும் தலைவியின் தமையன்மார்க்கும் கூறி அறத்தொடு நிற்பாள்.

தலைவியின் களவொழுக்கச் செய்தி பலவழிகளில் வருமாயினும் இலக்கணம் ஆகலான் ஒரு படி நிலையாகத் தலைவியின் தந்தை தமையன்களிடம் செல்வதை அறியலாம்.

**களவொழுக்கம்**

↓

**தலைவி அறத்தொடு நிற்றல் (தலைவி பாங்கியிடம் கூறுதல்)**

↓

**பாங்கி அறத்தொடு நிற்றல் (பாங்கி செவிலியிடம் கூறுதல்)**

↓

**செவிலி அறத்தொடு நிற்றல் (செவிலி நற்றாயிடம் கூறுதல்)**

↓

**நற்றாய் அறத்தொடு நிற்றல் (நற்றாய் தன் கணவன் மகன்களிடம் கூறுதல்)**

இவ்வாறு தலைவின் களவொழுக்கச் செய்திகளைத் தந்தையும் தமையன்மாரும் அறிந்துகொள்வதைத் தொல்காப்பியர்,

**தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப**

**(தொல்.பொருள்.135)**

எனக் குறிப்பிடுகின்றார்.



## அறத்தொடு நிற்பாரின் வினாக்கள்

**53. பாங்கி தலைவியை வினவும் செவிலி**
**பாங்கியை வினவும் பாங்கி தன்னையும்**
**நற்றாய் தானும் வினவும் செவிலியின்**
**பொற்றொடிக் கிழத்தியை உற்று நோக்கின்.**

தலைவியின் உடல்மெலிதல், பசலை படர்தல் போன்ற வேறுபாடுகளைக் கண்டு பாங்கி தலைவியிடம் வினவுவாள். பொற்றொடி அணிந்த தலைவியைப் பற்றிச் செவிலியும் நற்றாயும் பாங்கியிடம் வினவுவர்.

பல்வேறு காரணங்களால் தலைவன், தலைவியின் களவு வாழ்க்கை நின்று போகும். அதனால் தலைவியிடம் மாற்றம் காணப்படும். அப்போது தலைவியின் மாற்றத்திற்கான காரணத்தை ஒருவரைக் கேட்டு மற்றவர் அறிய முயல்வர்.

## உடன்போக்கில் அறத்தொடு நிற்போர்

54. ஆங்குடன் போயுழி அறத்தொடு நிற்ப
பாங்கியும் செவிலியும் பயந்த தாயும்.

தலைவனும் தலைவியும் உடன்போக்கை மேற்கொண்ட காலத்துப் பாங்கியும் செவிலியும் நற்றாயும் அறத்தொடு நிற்பர்.

களவு வாழ்வில் ஈடுபட்ட தலைவனும் தலைவியும் கற்பு வாழ்க்கைக்குப் புக எண்ணும்போது மகள் மறுத்தல் போன்ற காரணங்களால் உடன் போக்கில் ஈடுபடுவர். அதனைப் பாங்கி செவிலிக்கும் செவிலி நற்றாய்க்கும் நாற்றாய் கணவன் மகன்களுக்கும் என முறையாகக் கூறி அறத்தொடு நிற்பர்.

(54)

### கற்பு

கற்பு வாழ்க்கை எனப்படும் இல்லற வாழ்க்கை களவு வாழ்க்கைக்குப் பிறகு அமையக் கூடியதாகும். தலைவனும் தலைவியும் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டுப் பல்வேறு கடமைகளைச் செய்வது கற்பு வாழ்க்கையிலாகும்.

**அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும்....** ***(சிலப்.16:71-73)***

எனச் சிலப்பதிகாரம் இல்லற வாழ்க்கையின் கடமைகளை நினைவு கூர்கின்றது. பலரையும் பாதுகாத்து அன்பு செலுத்துவது தலைவன் - தலைவியின் முதற்கடமை ஆகும்.

**கற்பின் வகை**

55. **களவின் வழிவந்த கற்பும் பொற்பமை**
**களவின் வழிவாராக் கற்புமென் றாங்கு**
**முற்படக் கிளந்த கற்புஇரு வகைத்தே.**

களவின் வழியாக அமைந்த இல்லற வாழ்க்கை, களவால் வாராத இல்லற வாழ்க்கை என கற்பின் வாழ்க்கை இருவகையில் அமையும். இவற்றில் களவின்வழி வந்த கற்பு வாழ்க்கையே சிறந்தது என்பதனால் அகப்பொருள் விளக்க ஆசிரியர் இதனை முதலில் குறிப்பிடுகின்றார். களவின்வழி அமையும் கற்பு வாழ்க்கையே சிறப்புடையது என்பதை,

**முற்படப் புணராத சொல் இன்மையின்**
**கற்பெனப் படுவது களவின் வழித்தே** ***(இறை.கள.15)***

என இறையனார் களவியல் குறிப்பிடும்.

**(55)**

## கற்புப் புணர்ச்சியின் வகைகள்

56. **குரவரின் புணர்ச்சி வாயிலின் கூட்டம் என்று**
**இருவகைத் தாகும் கற்பின் புணர்ச்சி.**

குரவரின் புணர்ச்சி என்பது ஆன்றோர்களால் திருமணம் நடத்தி வைக்கப்பட்டுக் கூடும் கற்பின் புணர்ச்சியாகும். தலைவன் தலைவிக்குள் ஏற்பட்ட ஊடலைப் பாணன், பாடினி முதலாகிய வாயிலோர் தீர்த்து வைப்பது வாயிலின் கூட்டம் எனப்படும் கற்பின் புணர்ச்சியாகும்.

(56)

## களவின்வழி வந்த கற்புப்புணர்ச்சி

57. **அவற்றுள்,**
**களவின் வழிவந்த கற்பின் புணர்ச்சி**
**கிளைஞரின் எய்தாக் கேண்மையும் உடைத்தே**
**உடன்போய் வரைதலும் உண்மை யான.**

மேற்கூறப்பட்ட களவின்வழி வந்த கற்பு, களவின்வழி வாராக் கற்பு என்பவற்றில் களவின் வழிவந்த கற்பில் தலைவியின் சுற்றத்தார் வரைவு மறுத்தபோது தலைவன் தலைவியைத் தன்னூருக்கு அழைத்துச் சென்று மணம் செய்து கொள்ளுதலும் உண்டு.

தலைவியின் பெற்றோர் பெண் கொடுக்காததால் உடன்போக்கில் சென்று மணந்து கொள்வதைத் தொல்காப்பியர்,

**கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே**
**புணர்ந்துடன் போகிய காலை யான** ***(தொல்.பொருள்.141)***

எனக் குறிப்பிடுகின்றார்.

(57)

## கற்புக் காலத்துத் தலைவன்பால் நிகழும் நிகழ்ச்சி

58. **மறையிற் புணர்ச்சியும் மன்றல் புணர்ச்சியும்**
**இறைவற்கு எய்தலுண்டு இருவகைக் கற்பினும்.**

தலைவியை மணந்து கற்பு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் போது தலைவன் பரத்தையரோடு கூடி வாழ்தலும் பெருங்குலக் கிழத்தியை மணந்து கொண்டு வாழ்தலும் எனக் கற்புக் காலத்தே தலைவன்பால் இருவகை நிலைகள் காணப்படும்.

(58)

## மறை, மன்றல் புணர்ச்சிக்குரிய மகளிர்

59. **காதற் பரத்தையர் காமக் கிழத்தியர்**
**பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியென்று**
**அன்னவர் உரியர் அவைஇரண் டற்கும்.**

சேரிப் பரத்தையின் மகளாகிய காதற்பரத்தையும் ஒருவனுக்கே உரிமையுடைய காமக் கிழத்தியரும் இரண்டாம் மனைவியாகிய பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியும் தலைமகனின் களவுப் புணர்ச்சிக்கும் மன்றல் புணர்ச்சிக்கும் உரியவராவர்.

(59)

**களவிற் புணர்ச்சிக்குரிய மகளிர்**

60. **அவருள்.**
**காதற் பரத்தையர் களவிற்கு உரியர்.**

மேற்குறிக்கப்பட்ட மூவருள் காதற் பரத்தையர் களவொழுக்கப் புணர்ச்சிக்கு உரியவராவர்.

(60)

**மன்றல் புணர்ச்சிக்கு உரிய மகளிர்**

61. **ஒழிந்தோர் மன்றல் புணர்ச்சிக்கு உரியர்.**

காமக் கிழத்தியரும் பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியரும் மன்றல் புணர்ச்சியாகிய வதுவைப் புணர்ச்சிக்கு உரியவராவர்.

(61)

**கற்புக் காலத்தில் நிகழும் பிரிவுகள்**

62. **பரத்தையின் பிரிதல் ஓதற்குப் படர்தல்**
**அருள்தரு காவலொடு தூதிற்கு அகறல்**
**உதவிக்கு ஏகல் நிதியிற்கு இகத்தலென்று**
**உறைபெறு கற்பின் பிரிவுஅறு வகைத்தே.**

தலைவியுடன் கற்பு வாழ்க்கை என்னும் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் தலைவனுக்கு ஆறுவகையான பிரிவுகள் ஏற்படுகின்றன.

**1. பரத்தையிற் பிரிவு**
**2. ஓதற் பிரிவு**
**3. காவற்பிரிவு**
**4. தூதின் பிரிவு**
**5. துணைக்காகப் பிரிவு**
**6. பொருள் தேடப்பிரிவு**

(62)

**1. பரத்தையிற் பிரிவு**

தலைவியோடு இல்லற வாழ்வு நடத்திக் கொண்டிருக்கும் தலைவன் பரத்தையின்பால் காதல் கொண்டு சேரிக்குச் செல்வான். தலைவியைப் பிரிந்து பரத்தையிடம் உறவாடச் செல்வது பரத்தையிற் பிரிவாகும்.

**1.1 பரத்தையிற் பிரிவின் வகைகள்**

63. **அயல்மனைப் பிரிவு அயல்சேரியின் அகற்சி**
**புறநகர்ப் போக்குஇவை புரவலர்க்கு உரிய**
**பரத்தையிற் பிரியும் பருவத் தான.**

பரத்தையின் பொருட்டுத் தலைவியைப் பிரியும் தலைவன் மூன்று நிலைகளில் பிரிவான்.

1. **அருகிலிருக்கும் பரத்தையின் மனைக்குப் போதல்**
2. **அருகிலிருக்கும் சேரிக்குச் செல்லுதல்**
3. **நகருக்குப் புறத்தே போதல்**

என மூன்று வகையாம்.

(63)

### 1.1.1 அயல்மனைப் பிரிவு

**64. கெழீஇய காமக் கிழத்தியர் பொருட்டாத்**
**தழீஇய அயல்மனைத் தலைவன் பிரியும்.**

தன் மனதிற்கு மகிழ்வைத் தரும் காமக் கிழத்தியரின் மனை அடுத்திருப்பதால் அயல்மனைக்குப் பிரிந்து செல்வான்.

(64)

### 1.1.2 அயற்சேரிப் பிரிவு

**65. பின்னர் வரைந்த பெதும்பையும் பரத்தையும்**
**இன்னியல் விழவும் ஏது வாக**
**அவன்அயல் சேரியின் அகலும் என்ப.**

இரண்டாவதாக, மணந்து கொண்ட பெதும்பைப் பருவத் தாளுக்காகவும் காதற் பரத்தைக்காகவும் நடைபெற இருக்கும் இனிய விழாவின் பொருட்டாகவும் தலைவன் அயல் சேரிக்குத் தலைவியைப் பிரிந்து செல்வான்.

(65)

### 1.1.3 புறநகர்க்குப் போதல்

**66. விருந்தியல் பரத்தையைப் பெருந்தேர் மிசைக்கொண்டு**
**இளமரக் காவில் விளையா டற்கும்**
**புனல் ஆடற்கும் புறநகர்ப் போகும்.**

இளமரங்கள் நிறைந்த பூஞ்சோலையில் விளையாடுவதற்காகவும் நீரில் விளையாடி மகிழ்வதற்காகவும் தலைவன் புதியவளாகக் கிடைத்த பரத்தையைத் தேரில் ஏற்றிக் கொண்டு புறநகர்ப் பகுதிக்குப் போவான்.

தலைவன் பரத்தையின் பொருட்டாகப் பிரிவது மேற்கூறியவாறு மூன்று நிலைகளில் அமைகிறது.

| | | |
|---|---|---|
| அயல் மனைப் பிரிவு | : | காமக் கிழத்தியர் |
| அயற்சேரிப் பிரிவு | : | பெதும்மைப் பருவத்தாள், காதற் பரத்தையர் |
| புறநகர்ப் பிரிவு | : | புதிய பரத்தையர் |

(66)

## தலைவிக்கு ஊடல் ஏற்படுதல்

இல்லற வாழ்வாகிய கற்பு வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த தலைவன் பரத்தையின் பொருட்டுப் பிரிந்ததால் தலைவி அடையும் வருத்தமும் சினமும் உறுதியுமே ஊடல் எனப்படும்.

67. ஊடல் அவ்வழிக் கூடும் கிழத்திக்கு.

தலைவன் காமக் கிழத்திக்காகத் தலைவியைப் பிரிந்து அயல் மனையில் தங்கும்போதும் பெதும்பைப் பருவத்தாளுக்காகவும் காதற் பரத்தைக்காகவும் அயல் சேரியில் தங்கும் போதும் புதிய பரத்தையுடன் மகிழ்ச்சியோடு இருக்கப் புறநகர்ப் பக்கம் போகும்போதும் தலைவி ஊடல் கொள்வாள். (67)

## வாயில்

**வாயில் - வழி.** தலைவனுடைய இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாக இருந்து பின்னர்த் துறவுக்கும் உரியவராவார்.

## ஊடலைத் தணிக்கும் வாயில்கள்

68. கொளைவல் பாணன் பாடினி கூத்தர்
இளையர் கண்டோர் இருவகைப் பாங்கர்
பாகன் பாங்கி செவிலி அறிவர்
காமக் கிழத்தி காதல் புதல்வன்
விருந்து ஆற்றாமை என்றுஇவை ஊடல்
மருந்தாய்த் தீர்க்கும் வாயில்கள் ஆகும்.

| | | |
|---|---|---|
| *1. பாணன்* | *6. பாங்கன் (சூத்திரன்)* | *11. அறிவர்* |
| *2. பாடினி* | *7. பாங்கன் (பார்ப்பனன்)* | *12. காமக்கிழத்தி* |
| *3. கூத்தர்* | *8. பாகன்* | *13. காதல் புதல்வன்* |
| *4. இளையோர்* | *9. பாங்கி* | *14. விருந்தினர்* |
| *5. கண்டோர்* | *10. செவிலி* | *15. ஆற்றாமை* |

மேற்குறிக்கப்பட்ட பதினைவரும் தலைவியின் ஊடல் என்னும் நோயைத் தீர்க்கும் மாமருந்தாக இருப்பதால் ஊடல் தணிக்கும் வாயில்கள் எனப்படுகின்றனர்.

### ஓதற் பிரிவு: வேதம் ஓதுவோர்

**69. ஓதல் தொழில் உரித்து உயர்ந்தோர் மூவர்க்கும்.**

முதன்மையான கல்வியாகக் கருதப்படும் வேதம் ஓதுதல் என்பது உயர்ந்தோராகக் கருதப்படும் அந்தணர், அரசர், வணிகர் (வைசியர்) என்னும் மூவர்க்கும் உரியதாகும். வேதம் ஓதுதல் பொருட்டாக இம்மூவருக்கும் ஓதற் பிரிவு வரும்.

(69)

### ஏனைக் கல்விக்கு உரியர்

**70. அல்லாக் கல்வி எல்லார்க்கும் உரித்தே.**

வேதம் அல்லாத கல்வி அந்தணர், அரசர், வணிகர், வேளாண் மக்கள் என அனைவர்க்கும் உரித்தாகும்.

(70)

### படைக்கலம் முதலியன பயிறல்

**71. படைக்கலம் பயிறலும் பகடுபிற ஊர்தலும்**
**உடைத்தொழில் அவர்க்கென உரைத்திசி னோரே.**

படைக்கலங்களைப் பயன்படுத்தக் கற்றலும் யானை, குதிரை, தேர் முதலியவற்றை ஊரக் கற்றலும் அரசர், வணிகர், வேளாண் மக்கள் என்னும் மூவர்க்கும் உரியதாகும்.

(71)

### 3. காவற்பிரிவின் வகை

**72. அறப்புறங் காவல் நாடுகாவல் எனச்**
**சிறப்புறு காவல் திறம்இரு வகைத்தே.**

தருமத்தின் பொருட்டாக அளிக்கப்பட்ட பூமிகளைக் காத்தல், நாட்டைக் காத்தல் என இருவகையில் காவற் பிரிவு அமையும்.

(72)

### அறப்புறங் காப்பவர்

**73. அவற்றுள்,**
**அறப்புறம் காவல் அனைவர்க்கும் உரித்தே.**

அறத்தின் பொருட்டு ஒதுக்கப்பட்டவற்றைக் காக்கும் பொறுப்பு அந்தணர், அரசர், வணிகர், வேளாண் மக்கள் என அனைவர்க்கும் உரித்தாகும்.

**கோயில், அறச்சாலை, ஊர் பொதுமன்றம் ஆகியவை செவ்வனே நடத்தப் பெறுகின்றனவா என்பதனை அறிதற்குப் பிரியும் பிரிவு.**

***(இறை.கள.41 உரை)***

நாடு காப்பவர்

74. மற்றைக் காவல் கொற்றவர்க்கு உரித்தே.

நாட்டைக் காக்கும் பொறுப்பு ஆளும் அரசர்க்கு உரிய ஒன்றாகும். நாடு காத்தற்குப் பிரியும் பிரிவு அரசனுக்கே சிறப்பாக உரியது. (74)

**தூதின் பிரிவுக்கு உரியவர்**

**75. வேத மாந்தர் வேந்தரென்று இருவர்க்கும்**
**தூது போதல் தொழில்உரித் தாகும்.**

தூது போதல் என்னும் தொழில் அந்தணர்க்கும் வேந்தருக்கும் உரிய தொழிலாகும்.

**அந்தணர் தூது**

அந்தணன் ஒருவன் வந்து கூறிய தூதால் அரசன் மதில் ஏற உதவும் ஏணியையும் மதிற் கதவிலுள்ள சீப்பையும் யானையின் மணியையும் நீக்கினான் எனப் பொருள் தரும். பின்வரும் புறநானூற்றுப் பாடலில் அந்தணர் தூது போதல் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது.

***வயலைக் கொடியின் வாடிய மருங்குல்***
***உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்***
***எவ்வி வந்து நில்லாது புக்குச்***
***சொல்லிய சொல்லோ சிலவே அதற்கே***
***ஏணியும் சீப்பும் மாற்றி***
***மாண்வினை யானையும் மணிகளைந் தனவே*** ***(புறம்.305)***

**அரசர் தூது**

வஞ்சக நெஞ்சினன் தன் மாமன் கஞ்சனின் வஞ்சனைச் செயல்களை வென்றவன்; கணணன்; பாண்டவர் பொருட்டுத் தூது சென்றவன் எனப் பொருள் பின்வரும் தரும்பாடல் அடிகள்வழித் துவாரகையை ஆட்சிபுரிந்த கண்ணபிரானாகிய மன்னன் பாண்டவர்களுக்காகக் கௌரவர்களிடம் தூது சென்றமை குறிக்கப்பட்டுள்ளது.

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்து ஆரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராயணா என்னா நாவென்ன நாவே

*(சிலப்.17 : 3)*

(75)

## நாடுகாவல், தூதுப்பிரிவுக்குச் சிறப்புவிதி

76. சிறப்புப் பெயர்பெறின் செப்பிய இரண்டும்
உறற்குரி மரபின ஒழிந்தோர் இருவர்க்கும்.

அரசனிடமிருந்து தங்கள் திறமைக்கும் அறிவு நுட்பத்திற்கும் சான்றாகச் சிறப்புப் பட்டங்களைப் பெற்றிருப்பின் வணிகரும் வேளாண் மக்களும் தூது போகும் தகுதியைப் பெறுவர்.

(76)

## துணைவயின் பிரிவுக்கு உரியர்

77. உதவி அந்தணர் ஒழிந்தோர்க்கு உரித்தே.

அரசர்களுக்கு உற்ற துணையாக இருந்து உதவி செய்ய வணிகர், வேளாண் மக்கள் போன்றோர் உரியவராவர்.

(77)

(88)

## ஓதற் பிரிவிற்குக் காலம்

89. அவற்றுள்,
ஓதற் பிரிவுடைத்து ஒருமூன்று யாண்டே.

பிரிவு வகைகளுள் ஒன்றான கற்றல் என்னும் ஓதற் பிரிவுக்குக் கால வரையறை மூன்று ஆண்டுகளாகும்.

(89)

## தூது, துணை, பொருள் – பிரிவுக்குக் காலம்

90. தூதின் பிரிவும் துணைவயின் பிரிவும்
பொருள்வயின் பிரிவும் ஓர்யாண்டு உடைய.

*1. தூதின் பொருட்டுப் பிரிதல்,*
*2. உதவி செய்யும் பொருட்டுப் பிரிதல்*
*3. பொருள் தேடப் பிரிதல்*

என்னும் மூன்று பிரிவுகளுக்கும் கால எல்லை ஓர் ஆண்டாகும்.

(90)

## பரத்தையின் பிரிவுக்குக்காலம்

91. பூத்த காலைப் புனையிழை மனைவியை
நீராடியபின் ஈராறு நாளும்
கருவயிற்று உறூஉம் காலம் ஆதலின்
பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன்.

பூப்பு எனப்படும் வீட்டுவிலக்கு காலத்தில் தலைவி நீராடிய பின் பன்னிரண்டு நாட்களுக்குள் கரு உருவாகும். பரத்தையின் பிரியும் தலைவன் இக்காலத்தில் தலைவியைப் பிரிவதில்லை. இதனைப்

**பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்**
**நீத்தகன்று உறையார் என்மனார் புலவர்**
**பரத்தையின் பிரிந்த காலை யான**

எனத் தொல்காப்பியரும், **(தொல்.பொருள்.185)**

**தீண்டாநாள் முந்நாளும் நோக்கார்நீர் ஆடியபின்**
**ஈராறு நாளும் இகவற்க என்பவே**
**பேரறி வாளர் துணிவு**

என ஆசாரக்கோவையும் குறிப்பதைக் காணலாம். **(ஆசா.கோ.42)**

## கற்புக் காலத்துத் தலைமகளுக்கு உரிய ஒழுகலாறுகள்

94. பூத்தமை சேடியின் புரவலர்க்கு உணர்த்தலும்
நீத்தமை பொறாது நின்றுகிழ வோனைப்
பழிக்கும் காமக் கிழத்தியைக் கழறலும்
கிழவோன் கழறலும் வழிமுறை மனைவியைக்
கொழுநனொடு வந்தெதிர் கோடலும் அவனொடு
பாங்கொடு பரத்தையைப் பழித்தலும் நீங்கிப்
புறநகர்க் கணவனொடு போகிச் செறிமலர்ச்

சோலையும் காவும் மாலையும் கழனியும்
மாலைவெள் ளருவியும் மலையும் கானமும்
கண்டுவிளை யாடலும் கரும்புனல் யாறும்
வண்டுமயிர் கமல வாவியும் குளனும்
ஆடிவிளை யாடலும் கூடும் கிழத்திக்கு.

1. கற்புக் காலத்தில் தலைவி பூப்பெய்தியவழி அச்செய்தியைச் செவ்வணி அணிந்த தோழி வாயிலாகக் காமக் கிழத்தியது இல்லத்தில் இருக்கும் தலைவனுக்குத் தெரிவிப்பாள்.
2. தலைவன் தலைவியைக் குறித்துக் காமக் கிழத்தியை நீங்கி வரவே, அது பொறாது பழிதூற்றும் அவளைத் தலைவி ஏசுவாள்.
3. தலைவனது புறத்தொழுக்கம் குறித்து அவனையும் இடித்துரைப்பாள்.
4. தலைவன் மணந்த இரண்டாம் மனைவியை அவனோடு எதிர்கொண்டு அழைத்து உபசரிப்பாள்.
5. இரண்டு மனைவியையும் ஏனைய தோழி, பாங்கன் போன்ற துணைவரையும் தன் பக்கம் கொண்டு பரத்தையை ஏசுவாள்.
6. கணவனோடு ஊர்ப்புறத்தே புறப்பட்டுச் சென்று சோலையும் வயலும் அருவியும் மலையும் காடும் கண்டு மகிழ்ந்து விளையாடுவாள்.
7. ஆற்றிலும் ஓடையிலும் குளத்திலும் அவனொடு கூடி விளையாடுவாள். (94)

வாயில்களுள் பாணர்க்கு உரிய செயல்

95. வாயில் வேண்டலும் வாயில்நேர் வித்தலும்
சேயிழை ஊடல் தீர்த்தலும் போயுழி
அவள்நலம் தொலைவுகண்டு அழுங்கலும் அவன்வயின்
செல்ல விரும்பலும் சென்றுஅவற்கு உணர்த்தலும்
சொல்லிய கூற்றெனச் சொல்லுங் கிழவோன்
வரவு மீண்டுவந்து அரிவைக்கு உணர்த்தலும்
அணிநலம் பெற்றமை அறியான் போன்றுஅவள்
பணிவொடு வினாதலும் பாணற்கு உரிய.

1. தலைவனுக்காகத் தலைவியிடம் வாயில் வேண்டுவது.
2. தலைவனுக்கு வாயில் அமைத்துத் தருவது.
3. தலைவியின் ஊடலைத் தீர்த்து வைப்பது.
4. தலைவனைப் பிரிந்த தலைவியின் மெலிவு கண்டு வருந்துவது.

5. தலைவனிடம் மீண்டும் செல்வது.
6. தலைவனிடம் தலைவியின் நிலைமையைக் கூறுவது.
7. தலைவனிடம் தலைவி கூறியவற்றைக் கூறுவது.
8. பரத்தையிடமிருந்து பிரிந்து தலைவியைக் காணத் தலைவன் வருவதைக் கூறுவது.
9. தலைவன் வரப்போவது கண்டு மகிழ்ந்திருக்கும் தலைவியை அஃது அறியாதவன் போல வினவுவது.

என இவை எல்லாம் பாணர்க்கு உரிய செயல்கள் ஆகும்.

(95)

## விறலிக்கு உரிய செயல்

96. **செலவில்** தேற்றலும் **புலவியில்** தணித்தலும்
**வாயில் வேண்டலும்** வாயில்நேர் வித்தலும்
**தெரியிழை விறலிக்கு உரிய வாகும்.**

1. *தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றபிறகு அவளுக்கு நன்மொழி கூறி ஆற்றுப் படுத்துவது.*
2. *தலைவன் திரும்பியபிறகு தலைவியின் ஊடலைத் தணிப்பது.*
3. *தலைவியிடம் வாயில் வேண்டுவது.*
4. *வாயில் நேர்வித்துக் கொடுப்பது.*

*போன்றவை விறலிக்குரிய கடமைகளாகும்.*

*விறலி என்பவள் தலைவன், தலைவிக்குத் தோழி போன்றவள். தலைவியின் ஊடலையும் தீர்த்து வைப்பாள். தலைவியோடு தலைவனைச் சேர்த்து வைக்க வாயிலாகவும் திகழ்வாள். ஆடல், பாடல் என்னும் இருகலைகளிலும் தேர்ந்தவள். விறலியை வாயில் வேண்டுபவளாக வைத்துப் பிற்காலத்தில் நிறைய* ***விறலி விடுதூது*** *என்னும் சிற்றிலக்கிய நூல்கள் தோன்றியுள்ளன.*

(96)

## கூத்தர்க்கு உரிய செயல்

97. செல்வம் வாழ்த்தலும் நல்லறிவு கொளுத்தலும்
கலனணிபு உணர்த்தலும் காமநுகர்பு உணர்த்தலும்
புலவிமுதிர் காலைப் புலங்கொள ஏதுவிற்
தேற்றலும் சேய்மை செப்பலும் பாசறை
மேற்சென்று உரைத்தலும் மீண்டுவரவு உணர்த்தலும்
கூற்றிரு மரபின் கூத்தர்க்கு உரிய.

1. *தலைவன், தலைவியின் செல்வம் மேலும் பெருக வாழ்த்துவது.*
2. *வாழ்வுக்குத் தேவையான நல்லறிவைப் புகட்டுவது.*
3. *நல்ல உடைகளையும் அணிகலன்களையும் அணிய அறிவுறுத்துவது.*
4. *காம நுகர்ச்சி பற்றிய நுட்பங்களை விளக்குவது.*

5. ஊடலால் தலைவனின் மனநிலை அடையும் மாற்றத்தையும் அதன் விளைவையும் கூறுவது.
6. தலைவன் பிரிந்து சென்று இருக்கும் இடத்தைப் பற்றிக் கூறுவது.
7. தலைவியின் நிலை குறித்துப் பாசறைக்குச் சென்று விளக்குவது.

என்பனவை அனுபவம் வாய்ந்த கூத்தரின் செயல்களாகும்.

**கூத்தர்**

நாடகசாலையார். பண்டைக் காலம்தொட்டு வருகின்ற நன்றும் தீதும் பற்றித் தாம் கற்றறிந்தவற்றை நாடகங்களை அவைக்கு வந்தோர்க்கு எல்லாம் நடித்துக் காட்டும் தொழிலை உடையவர்.

*(தமிழ் இல.பேர.2-31)*

(97)

## இளையோர்க்கு உரியசெயல்

**இளையோர் என்போர்**

உழையிருந்து குற்றேவல் புரிதலும் காவல் புரிதலும் உயர்ந்தோர் ஒழுக்கமாகிய நன்னடைத்தையும் எல்லாம் இளையோர்க்கு உரியனவாம். இளையோர் எனப்படுவோர் தலைவனின் தந்தைக்குக் காமக் கிழத்தியர்வழிப் பிறந்தவரும் சிறுபான்மை பிறருமாவர். அம்முறையில் உடன் பிறப்பன்ன உரிமை பூண்டொழுகுவர்.

*(அக.கலை.பக்.56-57)*

98. மடந்தையை வாயில் வேண்டலும் வாயில்
உடன்படுத்தலும் அவள் ஊடல் தீர்த்தலும்
கொற்றவற்கு உணர்த்தலும் குற்றேவல் செய்தலும்
சென்று முன்வரவு செப்பலும் அவன்திறம்
ஒன்றிநின்று உரைத்தலும் வினைமுடிபு உரைத்தலும்
வழியியல்பு கூறலும் வழியிடைக் கண்டன
மொழிதலும் இளையோர் தொழிலென மொழிப.

1. ஊடியிருக்கும் தலைவியிடம் சென்று வாயிலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுவது.
2. வாயில் அமைத்துக் கொடுப்பது.
3. தலைவியின் ஊடலைத் தீர்த்து வைப்பது.
4. கொற்றவனாகிய தலைவனுக்கு ஊடல் நீங்கிய தலைவியின் நிலையை எடுத்துரைப்பது.
5. தலைவன், தலைவி இருவர்க்கும் குற்றேவல் செய்வது.
6. தலைவனின் வருகையைத் தலைவியிடம் சென்று கூறுவது.
7. தலைவனுக்காக அவனுடைய நிலமையைத் தலைவியிடம் எடுத்துக் கூறுவது.

8. தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் செய்த பணியினை எடுத்துக் கூறுவது.

9. வினைமுடிக்கச் சென்ற தலைவன் திரும்பி வரும்போது அந்த வழி எவ்வாறு இருந்தது என்பதைக் கூறுவது.

10. வந்தவழியில் பார்த்தவற்றைச் சுவைபடக் கூறுவது.

போன்றவை இளையோருக்கு உரிய செயல்களாகும்.

இளையோரின் செயற்பாட்டைப் பற்றி நச்சினார்க்கினியரின் உரை பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

1. தலைவன் தலைவியுடன் ஆயினும் தனித்தாயினும் போக்கு ஒருப்பட்ட இடத்தே அவனுடன் செல்ல வேண்டிய இளையோர் செல்லும் வழி தண்ணிது, வெய்யது, சேய்த்து, அணித்து என்றாற் போல ஆற்றது நிலைமை கூறல்.
2. துணிந்து சென்று எடுத்த கருமம் முடிக்குமாறு கூறுதல்.
3. இன்னுழி இன்னது செய்க என்று ஏவியக்கால், அதனை முடித்து வந்து கூறுதல்.
4. தலைவன் ஏவலைத் தாம் கேட்டல்.
5. தலைவன் வினவாதவழியும் தலைவிக்காகவாவது சொல்லத் தக்க அறிவுரைகளைத் தலைவனிடம் கூறல்.
6. போகும் பாலைவழிக் கண் கண்ட நிமித்தம் முதலிய பொருள்களைத் தலைவனுக்கும் தலைவிக்கும் உறுதி பயக்குமாறு கூறுதல்.
7. போகும்வழியுள் மாவும் புள்ளும் புணர்ந்து விளையாடுவனவற்றை அவ்விருவர்க்குமாயினும் தலைவற்கேயாயினும் காட்டுதலும் ஊறு செய்யும் கொடிய விலங்குகளை அகற்றக் கூறுதலும்.
8. தலைவன் வருவன் எனத் தலைவி மாட்டுத் தூதாய் வருதல்.
9. தலைவற்குத் தலைவியின் நிலையை அறிந்து சென்று கூறல்.
10. மீளுங்கால் விருந்து பெறுவள்கொல் எனத்தலைவி நிலைகூறல்.
11. குற்றேவல் செய்து தலைவன், தலைவியரைப் பாதுகாத்தல்.

(தொல்.பொருள்.170,171, நச்சர்.)

(98)

## கண்டோர்க்கு உரிய செயல்

99. தீதுடைப் புலவி தீர்த்தலும் அவன்வரல்
காதலிக்கு உரைத்தலும் கண்டோக்கு உரிய.

தலைவன் தலைவியைப் பற்றி அறிந்தோராகிய கண்டோருக்கு இரு செயல்கள் உரித்தாகும்.

1. ஊடலினால் வருந்தி இருக்கும் தலைவியை ஆற்றுப்படுத்தி அவளைத் தலைவனோடு சேர்த்து வைப்பது.
2. வினையின் பொருட்டுப் பிரிந்து சென்ற தலைவனின் வருகையைத் தலைவிக்கு உரைப்பது.

(99)

### பார்ப்பனப் பாங்கர்க்கு உரிய செயல்

100. இளமையும் யாக்கையும் வளமையும் ஏனவும்
நிலையாத் தன்மை நிலையெடுத்து உரைத்தலும்
செலவழுங்கு வித்தலும் செலவுடன் படுத்தலும்
பிறவும் எல்லாம் மறையோர்க்கு உரிய.

1. இளமையும் யாக்கையும் செல்வமும் ஏனைய பிறவும் நிலைத்து நில்லாதவை என்பதை எடுத்துக் கூறுவது
2. நிலமைக்கு ஏற்றவாறு தலைவன் செல்வதைத் தடுத்து நிறுத்துவது (செலவழுங்குவது)
3. சரியான நேரமாக இருக்கும்போது சென்று வரக் கூறுவது

என இன்ன பிறவும் பார்ப்பனப் பாங்கர்க்கு உரிய செயற்பாடுகளாகும்.

> தலைவனுடைய பெற்றோர்களின் தம் பிரதிநிதியாகத் தலைவனுக்குக் காட்டிக் கொடுக்கப்பட்ட நண்பன் பாங்கன் ஆவான். தலைவனுடைய பெற்றோர் போல அவன் நலன்களைப் பேணுதலும் தவறு கண்டவிடத்து இடித்துரைத்துத் திருத்துதலும் பாங்கன் தொழிலாகும்.
>
> (தொல்.பொருள்.177. நச்சர்)

(100)

### சூத்திரப் பாங்கர்க்கு உரிய செயல்

101. நன்மையின் நிறுத்தலும் தீமையின் அகற்றலும்
சொன்னவை பிறவும் சூத்திரர்க்கு உரிய.

1. தலைவன் நல்ல செயல்களைச் செய்ய நெறிப்படுத்துவது.
2. தீமை தரும் செயல்களைச் செய்ய விடாமல் பாதுகாப்பது.

பிறவும் என்றதனால் தலைவியிடம் வாயில் வேண்டல் போன்ற பணிகளையும் சூத்திரப் பாங்கர் செய்வர்.

(101)

### பாகற்கு உரிய செயல்

102. சேயிழை கிழத்தியை வாயில் வேண்டலும்
வாயில்நேர் வித்தலும் வயங்குதுனி தீர்த்தலும்
வினைமுடித்து அதன்பின் வியன்பதி சேய்த்தென
வினைவோன் தேற்றலும் பாகற்கு இயல்பே.

1. தலைவன் பரத்தையைப் பிரிந்து மீண்டு தன் இல்லம் வந்தபோது ஊடல் கொண்ட தலைவியைத் தான் வாயிலாக நின்று தலைவனை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுதல்.
2. பின் ஏற்றுக் கொள்ளச் செய்தல்.
3. அதற்கு ஏதுவாக அவளது ஊடலைப் போக்குதல்.
4. கற்புக் காலத்தில் தலைவியைப் பிரிந்து நாடிடை இட்டும் காடிடை இட்டும் போய்த் தன்செயலை நிறைவேற்றிய பின் 'ஊர் சேய்மையில் உள்ளதே! தலைவியை விரைந்து சென்றடைதல் யாங்கனம்?' என்று தலைவன் வருந்துவது நோக்கி அவனைத் தேற்றுதல்

போல்வன பாகற்கு உரிய செயல்களாகும். (102)

## பாங்கிக்கு உரிய செயல்

103. பிரிவுழி விலக்கலும் பிரிவுஉடன் படுத்தலும்
பிரிவுழித் தேற்றலும் பிரிவுழி அழுங்கலும்
பிறவும் உரிய இறைவளைப் பாங்கிக்கு.

1. தலைவன் பிரிந்து செல்லக் கருதியவழித் தலைவியின் நிலை கூறிப் பிரிவை விலக்குவது.
2. தலைவன் சொல்லிய காரணங்களை ஏற்றுப் பிரிவுக்கு உடன்படுவது.
3. தலைவனைப் பிரிந்து வாடும் தலைவியை ஆற்றுப் படுத்துவது.
4. பிரிவுழி அழுங்குவது.

என்பவையும் **தலைவன் பரத்தையின் பிரிந்து திரும்பி வரும்போது தலைவியிடம் வாயில் வேண்டுவது** போன்றவையும் பாங்கிக்குரிய செயல்களாகும். (103)

## செவிலிக்கும் அறிவர்க்கும் உரிய செயல்

104. முன்வரு நீதியும் உலகியல் முறைமையும்
பின்வரும் பெற்றியும் பிறவும் எல்லாம்
தெற்றெனக் கூறல் செவிலித் தாய்க்கும்
உற்ற அறிவர்க்கும் உரியன ஆகும்.

1. தலைவன், தலைவியின் வாழ்க்கைக்கு அடிப்படையான நீதிக் கருத்துக்களைக் கூறுவது.
2. உலகியல் நடைமுறைகளாகிய வாழ்வியல் அனுபவங்களை எடுத்துக் கூறுவது.
3. நீதிக் கருத்து, உலகியல் நடைமுறைகளை அறிவதால் உண்டாகும் நன்மையைக் கூறுவது.

இவையும் இன்னும் பிற நற்கருத்துக்களையும் தலைவன் தலைவிக்குக் கூறுவது அனுபவம் நிறைந்த செவிலி, அறிவரின் செயல்களாகும். செவிலி நற்றாயின் தோழியாவாள். அனுபவம் நிறைந்தவள்.

**அறிவர்**

காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றமும் கடந்து முக்கால நிகழ்ச்சிகளையும் அறியவல்ல ஞானியர். இவர்கள் கூறும் கூற்றுக்களைச் செவிமடுத்துத் தலைவனும் தலைவியும் நல்லவற்றைச் செய்ய வேண்டும் எனவும் அல்லவற்றை விலக்க வேண்டும் எனவும் முக்காலச் சான்றோர்களின் செய்யுள்களை எடுத்துக் காட்டி விளக்கங்கூறி நல்வழிப்படுத்துவர்.

(தொல்.பொருள்.154. நச்சர்)
(104)

**காமக்கிழத்தியர்க்கு உரிய செயல்**

105. குடிப்பிறந் தோரை வடுப்படுத்து உரைத்தலும்
மனைவியைப் பழித்தலும் வாடா ஊடலுள்
தலைவன் கழறலும் மனைவிக்கு அமைந்த
ஒழுக்கமும் காமக் கிழத்தியர்க்கு உரிய.

1. தலைவன், தலைவி, அவர்களின் சுற்றத்தார் என நற்குடியில் பிறந்த அனைவரையும் நாவினால் வடுப்படுத்துவது.
2. தலைவனின் மனைவியாகிய தலைவியைப் பழிப்பது.
3. எப்போதும் ஊடல் கொண்டு தலைவனை இடித்துரைத்துக் கொண்டே இருப்பது.
4. தலைவனின் காமக்கிழத்தியாக இருந்தாலும் தலைவியைப் போல் ஒழுக்கத்தோடு இருப்பது.

என்பவை காமக்கிழத்தியின் செயல்களாகும்

**காமக்கிழத்தியர்**

காமக் கிழத்தியராவார் இல்லறம் நடத்தும் முறையான வாழ்க்கை உடையவராகிக் காமக் கிழமை பூண்டு தலைவனோடு இல்லறம் நடத்தும் பரத்தையர். இவர்கள்தாம் தலைமகனது இளமைப் பருவத்தில் கூடி முதிர்ந்தோரும் இடைநிலைப் பருவத்தோரும் அவனோடு கூட்டம் நிகழ்த்தும் இளமைப் பருவத்தோரும் காமம் சாலா இளமையோரும் எனப் பலராவர்.

(தொல்.பொருள்.151. நச்சர்)
(105)